1970 ஆகஸ்ட் 29]

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, கூடுமான வரையில் இரண்டாண்டு, மூன்ருண்டுகளுக்கு முன்பே பயிற்சி பெற்று வந்தவர்களுக்கு முதல் வாய்ப்புத் தந்து, பிறகு வந்த வர்களுக்குப் பின்னுல் வாய்ப்பு தர வேண்டுமென்ற முறையில்தான் மாவட்டத் தலைமைக் கல்வி அதிகாரிகள் கேட்டுக்கொள்ளப்பட்டிருக் கிருர்கள். ஆனல் அதற்குத் திட்டவட்டமான உத்தரவு இடப்பட வில்லை. கேட்டுக்கொள்ளப்பட்டு இருக்கிருர்கள். இரண்டு, மூன்று ஆண்டுகளுக்கு முன்பு பயிற்சி பெற்றவர்களுக்கு முதல் சலுகை அளிக்க வேண்டுமென்றும், அவர்களுக்கு வாய்ப்பளிக்க வேண்டு மென்றும் கருத்து சொல்லப்பட்டிருக்கிறது.

* 116 வினு—புலவர் பொ. பொன்னம்பலம்: மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், மாயனூரில் அமைந்த ஆசிரியப்பயிற்சிப் பள்ளிக்குச் சொந்தமான விவசாய நிலம் எவ்வளவு இருக்கிறது?

(இ) அந்நிலங்களில் விவசாய வேலை நடைபெறுகிறதா?

(உ) ஆமெனில், விளைபயன் எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) 22.92 ஏக்கர்.

(இ) 11.50 ஏக்கரில் விவசாயம் நடைபெறுகிறது.

(உ) விளைபொருளை பள்ளியின் ஹாஸ்டலுக்கோ அல்லது வெளியாருக்கோ ஏலத்தின் மூலம் விற்று கிடைக்கும் தொகை கரு வூலத்தில் செலுத்தப்படுகிறது.

புலவர் பொ. பொன்னம்பலம்: மதிப்பிற்குரிய பேரவைத் தலைவ ரவர்களே, மாயனூரில் அமைந்த அந்த ஆசிரியப் பயிற்சிப் பள்ளிக்குச் சொந்தமான நிலத்தில் அங்கே பயிலும் மாணவர்களைக் கொண்டே விவசாய வேலை நடைபெறுகிறதா அல்லது குத்தகைக்கு விடப்பட்டு விளைபயன் பெறப்படுகிறதா என்பதை அறிய விழைகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, அங்கிருக்கும் மாணவர்களைக்கொண்டே அந்த வேளாண்மைத் தொழில் மேற்கொள்ளப்படுகிறது. மாணவர்கள் வாரத்திற்கு ஒன்றரை மணியிலிருந்து இரண்டு மணி வரை ஈடுபடுத்தப்படுகின்ற முறையில் ஈடுபடுத்தப்படுகிருர்கள்.

திரு. எம். பூபதி: தலைவரவர்களே, பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் பலர் வேலையில்லாமல் இருக்கும் இந்தக்கால கட்டத்திலே, பயிற்சி தருகின்ற அந்தப் பள்ளிகளிலே மாணவர்களாக விளங்குகின்றவர் களுக்கு உற்சாகமூட்டி, தங்களுடைய பள்ளி முடிந்தபிறகு விவசாயத்தில் ஈடுபடுகின்ற அளவிற்கு முயற்சிகள் எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் கூறுகின்ற அதே யோசனை மேற் கொள்ளப்பட வேண்டுமென்று ஆங்காங்கே அறிவுறுத்தப்படுகிறது. அந்தந்தப் பள்ளிகளைச் சுற்றிலும் நிலமிருந்து, அந்த நிலத்தைப்

பயன்படுத்தும் அளவிற்கு இருந்தால், அதற்கு உடலுழைப்பைத் தர வேண்டும், அதற்கு மதிப்பு ஏற்படுத்த வேண்டுமென்ற முறையில் கூறப்பட்டிருக்கிறது. பலன், பணம் தருகின்ற முறையில், அந்தந்த நிலங்களுக்கு ஏற்ப என்னென்ன பயிர் செய்யலாம் என்ற நோக்கத்தின் அடிப்படையில் வாய்ப்பு தந்திருக்கிருர்கள். இப்படி ஆங்காங்கிருக்கின்ற தலைமை ஆசிரியர்கள், மற்ற ஆசிரியர்கள் ஊக்குவிக்க வேண்டுமென்ற கருத்து தரப்பட்டிருக்கிறது. சில இடங்களில் தண்ணீர் வசதியில்லாததால் அவர்களால் பயிர் செய்ய முடியவில்லையென்ருல், அதற்கு உதவி செய்வதற்காக ஆங்காங்கு தண்ணீர் கிடைக்கும் வகையில் கிணறு வெட்டவும், பம்பு செட்டுகள் வைத்து தண்ணீர் இறைத்து அதன் மூலம் பாசன வசதி செய்து அதன்மூலம் வசதி செய்து கொடுக்கும்படியும் கூறப்பட்டிருக்கிறது. எனவே, மாணவர்களை ஊக்குவிக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

திரு. மு. ச. சிவசாமி: தலைவரவர்களே, ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் சேர்வதற்கு, 250 எஸ்.எஸ்.எல்.சி. மார்க் வாங்கியவர்கள் அருகதை உள்ளவர்கள் என்று......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது மாயனூரில் அமைந்த ஆசிரியப் பயிற்சிப் பள்ளியைப்பற்றிய கேள்வி.

Assistant Commissioner of Police (Vigilance)

*110 *Q*.—Thiru T. MARTIN: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the present Assistant Commissioner of Police, Vigilance, City of Madras, functions under the direct control and supervision of the Commissioner of Police, Madras or the Inspector-General of Police, Madras;

(*b*) whether his work is periodically supervised and checked by the Inspector-General of Police, Tamil Nadu from the date of his assuming the present post till 27th November 1969; and

(*c*) if so, the particulars of such supervision and control exercised by the Superior Officer?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: (அ) சென்னை மாநகரம், கண்காணிப்புக் காவல் துறை அஸிஸ்டெண்ட் கமிஷனர், சென்னை காவல் துறைக் கமிஷனரின் கட்டுப்பாட்டின் கீழ்ப் பணியாற்றுகிருர்.

(இ) & (உ) கண்காணிப்பு, காவல்துறை அஸிஸ்டெண்ட் கமிஷனர், சென்னை (தெற்கு) (சட்டம், ஒழுங்கு), காவல் துறை டெபுடி கமிஷனரின் நேர்முகக் கட்டுப்பாட்டின் கீழ்ப் பணியாற்றுகிருர். டெபுடி கமிஷனர், எல்லா வழக்குப் பதிவேடுகளையும் விரிவாக ஆராய்கிருர். காவல் துறை அஸிஸ்டெண்ட் கமிஷனர் டெபுடி கமிஷனரின் கட்டளைப்படியும் கருத்துரைப்படியும் திடீர்ச் சோதனைகளை நடத்துகிருர்.

சென்னை மாநகரக் காவல் துறை அலுவலகங்களைப் பார்வையிடும்பொழுது காவல்துறை இன்ஸ்பெக்டர்ஜெனரல் இந்த அஸிஸ்டெண்ட் கமிஷனரின் பணியையும் ஆய்வு செய்கிருர்.